செய்தி வெளியீடு எண்: 829 நாள் : 28.09.2010

## எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ளதாக வந்த கடிதங்கள் தொடர்பான வழக்குகள் சி.பி.ஐ.—க்கு மாற்றம்

## தமிழக அரசு முடிவு

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ளதாக ஜெயா தொலைக்காட்சி நிறுவனத்தின்மூலம் பெறப்பட்ட ஏழு கடிதங்களின் அடிப்படையில், சென்னை நகரக் காவல் ஆணையர் மற்றும் தமிழ்நாடு காவல் துறைத் தலைமை இயக்குநர் ஆகியோரிடம், ஜெயா தொலைக்காட்சி நிறுவனத்தின் துணைத் தலைவர்கள் திரு. ரங்கநாதன் மற்றும் திரு. கே.பி. சுனில் ஆகியோர் 28.8.2010, 3.9.2010, 17.9.2010 (இரண்டு கடிதங்கள்) மற்றும் 24.9.2010 (மூன்று கடிதங்கள், இரண்டு புகார்கள்) ஆகிய தேதிகளில் கொடுத்த புகார்களின் பேரில், சென்னை மாநகர் கிண்டி காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 153, 506 (ii) ஆகியவற்றின் கீழ் குற்ற எண்கள் 692/2010, 709/2010, 796/2010, 823/2010 மற்றும் 824/2010—ன் படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட ஐந்து வழக்குகளிலும் சிறப்புத் தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்புத் தனிப் படைகள் மதுரை, தஞ்சை ஆகிய இடங்களுக்குச் சென்று அஞ்சல் நிலைய அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் உள்ளிட்ட 113 பேர்களை இதுவரை விசாரித்துள்ளனர். இக்கடிதங்கள் அனைத்தும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. புலன் விசாரணை — உயரதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது.

இருப்பினும், நேற்று (27—9—2010) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையிலான குழுவினர், தலைமைச் செயலாளரையும், உள் துறை முதன்மைச் செயலாளரையும் சந்தித்து, மேலும் கொலை மிரட்டல் விடுத்து மூன்று கடிதங்கள் வந்துள்ளதாகவும், இதுவரை கொடுத்த புகார்களின் மீது காவல் துறை எடுத்த நடவடிக்கை குறித்த தகவல்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்றும், அனைத்து வழக்குகளையும் மத்திய குற்றப் புலனாய்வுத் துறைக்கு விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்றும் ஒரு மனு அளித்துள்ளனர்.

தமிழகக் காவல் துறை இந்தப் புகார்கள் குறித்து உரிய நடவடிக்கைகள் தொடர்ந்து எடுத்து வந்துள்ள போதிலும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தலைமையில் வந்த குழுவினர் அளித்த கோரிக்கையை ஏற்று, இவ்வழக்குகள் அனைத்தையும் மத்திய அரசின் குற்றப் புலனாய்வுத் துறைக்கு (சி.பி.ஐ.) மாற்ற தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**********

வெளியீடு:—

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.